www.Padasalai.Net www.CBSEtips.in

V12Eco

விருதுநகர் மாவட்டப் பொதுத் தேர்வுகள்
அரையாண்டுப் பொதுத் தேர்வு - டிசம்பர் 2022

-----

வகுப்பு 12

நேரம்: 3.00 மணி | பொருளியல் | மொத்த மதிப்பெண்கள்: 90

பகுதி - அ

**I. பொருத்தமான விடையை தெரிவு செய்யவும்: 20×1=20**

1) பொருளாதாரக் கொள்கைகளின் அவசியத்தைக் குறிப்பிடுக.
அ) அடிப்படைப் பிரச்சனைகளைத் தீர்ப்பது
ஆ) தடைகளை முறியடிப்பது
இ) வளர்ச்சியை அடைவது ஈ) மேலே கூறப்பட்ட அனைத்தும்

2) ஒரு நாட்டின் சராசரி வருமானம் என்பது ............
அ) தனிநபர் வருமானம் ஆ) தலைவீத வருமானம்
இ) பணவீக்க வீதம் ஈ) செலவிடக்கூடிய வருமானம்

3) நடப்புக்கூலி விகிதத்தில் வேலை செய்ய விரும்புகிற ஒவ்வொருவரும் பணியில் இருந்தால் அது ............ எனப்படும்.
அ) முழுவேலைவாய்ப்பு ஆ) குறைந்தளவு வேலைவாய்ப்பு
இ) வேலைவாய்ப்பின்மை ஈ) வேலைக்கான வாய்ப்பு

4) குறைவான வட்டிவீதம்
அ) நுகர்வைக் குறைக்கும் ஆ) கடனுக்கான செலவை உயர்த்தும்
இ) சேமிப்பை ஊக்குவிக்கும் ஈ) நுகர்வையும் செலவையும் அதிகரிக்கும்

5) ............ பணவீக்கம் பணமதிப்பில் தீவிர மதிப்பு குறைவினை ஏற்படுத்துகிறது.
அ) தவழும் ஆ) நடக்கும் இ) ஓடும் ஈ) உயர்

6) வங்கியில்லா நிதிநிறுவனங்கள் ............ வைத்திருப்பதில்லை.
அ) வங்கி உரிமம் ஆ) அரசு அங்கீகாரம்
இ) பணச்சந்தை அங்கீகாரம் ஈ) நிதி அமைச்சக அனுமதி

7) கீழ்கண்ட எந்த பண மாற்று நிர்ணய முறையில் சந்தை விசைகளான தேவையும் அளிப்பும் பண மாற்று வீதத்தை நிர்ணயிக்கிறது?
அ) மாறா பண மாற்று வீதம் ஆ) மாறுகின்ற பண மாற்று வீதம்
இ) நிலைத்த பண மாற்று வீதம் ஈ) அரசு ஒழுங்கமைப்பு முறை

8) காப்புரிமை, பதிப்புரிமை, வாணிக ரகசியம் போன்றவை ............ உடன் தொடர்புடையவை.
அ) வணிகம் சார் சொத்துரிமை ஆ) வணிகம் சார்ந்த முதலீட்டு வழிமுறைகள்
இ) காட்ஸ் ஈ) NAMA

9) கீழே உள்ளவற்றில் எந்த வரி மைய அரசின் பட்டியலில் இல்லை?
அ) தனிநபர் வருமான வரி ஆ) நிறுவன வரி
இ) விவசாய வருமான வரி ஈ) கலால் வரி

10) பின்வரும் எது உலக வெப்பமயமாதலுக்கு காரணம்?
அ) பூமியின் ஈர்ப்பு விசை ஆ) ஆக்ஸிஜன்
இ) மையநோக்கு விசை ஈ) வெப்பநிலை அதிகமாகுதல்

11) குறுகிய காலத் திட்டத்தின் இன்னொரு பெயர்
அ) கட்டுப்படுத்தும் திட்டம் ஆ) கட்டுப்பாட்டை நீக்கும் திட்டம்
இ) சுழல் திட்டம் ஈ) சுழற்சியற்ற திட்டம்

12) $Y = 2-0.2X$ எனில், Y அச்சு வெட்டு ............ ஆகும்.
அ) $-2$ ஆ) 2 இ) $0.2X$ ஈ) மேற்சொன்ன அனைத்தும்

13) பேரியல் பொருளாதாரம் என்பது பற்றிய படிப்பு
அ) தனிநபர்கள் ஆ) நிறுவனங்கள் இ) நாடு ஈ) மொத்தங்கள்

14) அமைப்புசார் வேலையின்மையின் இயல்பு ............
அ) இயங்கா சமுதாயம் ஆ) சமதர்ம சமுதாயம்
இ) இயங்கும் சமுதாயம் ஈ) கலப்புப் பொருளாதாரம்

15) இர்விங் ஃபிஷரின் பண அளவுக் கோட்பாடு பிரபலமான ஆண்டு
அ) 1908 ஆ) 1910 இ) 1911 ஈ) 1914

16) சாதகமான வாணிக சூழலில் ஏற்றுமதி இறக்குமதியை விட ............ ஆக இருக்கும்.
அ) அதிகமாக ஆ) குறைவாக இ) கிட்டத்தட்ட சமமாக ஈ) சமமாக

17) பொதுக்கடனைத் திரும்பிச் செலுத்தும் முறை
அ) கடனை மாற்றுதல் ஆ) மூழ்கும் நிதி
இ) பகுதியாகச் செலுத்துதல் ஈ) இவை அனைத்தும்

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

18) பின்வருவனவற்றுள் பொருளாதார வளர்ச்சியின் தன்மை இல்லாததவை எது?
அ) வளர்ந்த நாடுகளை பற்றியது ஆ) படிப்படியான மாற்றம்
இ) எண்களின் அடிப்படையில் அமைந்தது ஈ) விரிவான கருத்து

19) ''உயிர்சார்'' என்ற வார்த்தையின் பொருள் என்ன?
அ) உயிர் வாழ்வன ஆ) உயிரற்றவை
இ) பருப்பொருள் ஈ) மேற்சொன்ன எதுவுமல்ல

20) ஆசியான் அமைப்பின் தலைமை அலுவலகம் அமைந்துள்ள இடம்
அ) ஜகார்த்தா ஆ) புதுடெல்லி இ) கொழும்பு ஈ) டோக்கியோ

## பகுதி - ஆ

**II. எவையேனும் 7 வினாக்களுக்கு ஓரிரு வரிகளில் விடையளிக்கவும். 7×2=14**
**வினா எண் 30 கட்டாயம் விடையளிக்கவும்.**

21) வளர்ச்சி நிலை அடிப்படையில் பொருளாதாரங்களை வகைப்படுத்துக.
22) GNP கணக்கிடும் சூத்திரத்தை எழுதுக.
23) உடன்பாடில்லா (Frictional) வேலையின்மை பற்றி சிறுகுறிப்பு வரைக.
24) ''நுகர்வு நாட்டம்'' என்றால் என்ன?
25) பண்டப்பணம் என்றால் என்ன?
26) கடன் உருவாக்கம் என்றால் என்ன?
27) ''பூஜ்ய அடிப்படை வரவு செலவுத் திட்டம்'' குறிப்பு வரைக.
28) ஒலிமாசுவினை கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகளை கூறுக.
29) பொருளாதார திட்டமிடலின் வரைவிலக்கணம் எழுதுக.
30) ஒட்டுறவு என்பதனை வரையறு.

## பகுதி - இ

**III. எவையேனும் 7 வினாக்களுக்கு ஒரு பத்தியில் விடையளிக்கவும். 7×3=21**
**வினா எண் 40க்கு கட்டாயம் விடையளிக்கவும்.**

31) சமத்துவத்தின் குறைகளைக் கூறுக.
32) காரணி செலவில் NNP விவரி.
33) நுகர்வுச் சார்பைப் பாதிக்கிற ஏதேனும் மூன்று அக மற்றும் புறக்காரணிகளை விளக்குக.
34) பணமதிப்பு மற்றும் கேம்பிரிட்ஜ் சமன்பாடுகளை விளக்குக.
35) பணமதிப்பு நீக்கத்தின் நோக்கங்களை குறிப்பிடுக.
36) பொருளாதார மாதிரியிலிருந்து பொருளாதார அளவையியல் மாதிரியினை வேறுபடுத்துக.
37) பல தரப்பு ஒப்பந்தம் என்றால் என்ன?
38) முதன்மைப் பற்றாக்குறை என்றால் என்ன?
39) வறுமையின் நச்சு சுழற்சியை எப்படித் தடுப்பது?
40) மாறுகின்ற பண மாற்று வீதத்தின் பொருள் தருக.

## பகுதி - ஈ

**IV. அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்கவும்: 7×5=35**

41) நடவடிக்கைகள் அடிப்படையில் ஒரு பொருளாதார அமைப்பு செயல்படுவதை விவரி. **(அல்லது)**
புள்ளியியலின் இயல்பு மற்றும் எல்லைகளை விளக்குக.

42) பொருளாதார ஆய்வில், சமூகக் கணக்கிடுதலின் அவசியத்தை விவாதி. **(அல்லது)**
பல்வேறு வகையானத் திட்டமிடல் வகைகளை விவரி.

43) தொன்மைக் கோட்பாடு மற்றும் கீன்ஸ் கோட்பாடு ஆகியவற்றிற்கு இடையிலான வேறுபாடுகளை விளக்குக. **(அல்லது)**
மொத்த தேசிய உற்பத்திக்கும் சுற்றுச்சூழல் தரத்திற்கும் இடையேயான தொடர்பினை சுருக்கமாக விளக்குக.

44) கீன்ஸின் நுகர்வுச் சார்பின் உளவியல் விதியினை வரைபடம் மூலம் விளக்குக. **(அல்லது)**
கடன் திரும்பச் செலுத்தும் முறைகளை விளக்குக.

45) இர்விங் ஃபிஷரின் பண அளவுக் கோட்பாட்டினை விளக்குக. **(அல்லது)**
இந்திய சமூக பொருளாதார மேம்பாட்டில் டபிள்யூ.டி.ஓ-ன் பங்கினை விவாதிக்க.

46) பணவியல் கொள்கையின் நோக்கங்கள் யாவை? விளக்குக. **(அல்லது)**
அயல்நாட்டுச் செலுத்துநிலை சமமின்மையின் வகைகளை விவரி.

47) பேரினப் பொருளியலின் பரப்பெல்லையை விவரி. **(அல்லது)**
தேசிய வருவாய் கணக்கீட்டில் உள்ள சிரமங்கள் யாவை?

-----------